செ.வெ.எண்.388/2021 நாள்.12.09.2021

# திருப்பத்தூர் மாவட்டம் உள்ள பல்வேறு இடங்களில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனை தொடர்ந்து நாட்றம்பள்ளி துவக்கப்பள்ளி, வாணியம்பாடி வட்டம் புதூர் நகராட்சி இந்து தொடக்கப்பள்ளி, செட்டியப்பனூர் ஊராட்சி அங்கன்வாடி பள்ளி வாணியம்பாடி வட்டம் கிரிசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் முகாமிற்கு வருகைபுரிந்துள்ள பொது மக்களிடம் உங்களுக்கு தகவல் எப்படி கிடைத்தது என கேட்டறிந்தார்கள். இம்முகாமில் பணிபுரிந்த மருத்துவர்களிடமும் செவிலியர்களிடமும் எத்தனை நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்பது குறித்தும் எவ்வளவு தடுப்பூசி இருப்பு உள்ளது குறித்தும் கேட்டறியப்பட்டது. இம்மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி முகாம்களில் அனைத்துறை அலுவலர்கள் அனைவரும் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள் என கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் கேட்டறிந்தார்கள்.

பின்னர் திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் இந்து மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் ஆம்பூர் சட்ட மன்ற

உறுப்பினர் திரு.அ.செ.வில்வநாதன் அவர்கள் தனது 2-வது தவணை கொரோனா தடுப்பூசியை செலுத்தி கொண்டார்கள்.

அதனை தொடர்ந்து திருப்பத்தூர் மீனாட்சி அரசு உயர்நிலைப்பள்ளி, மேரிமெர்குலேட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கதிரி மங்களம் ஊராட்சி ஒன்றிய தொக்கப்பள்ளி, ஜோலார்பேட்டை ஊராட்சிய ஒன்றியம் ஒட்டப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொக்கப்பள்ளி, அத்தனாவூர் ஊராட்சி ஒன்றிய தொக்கப்பள்ளி, கட்டேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது திருப்பத்தூர் சார் ஆட்சியர் மரு.பி.அலர்மேல்மங்கை.இ.ஆ.ப., உதவி திட்ட அலுவலர் திருமதி.விஜயகுமாரி, வட்டாட்சியர் திரு.சிவபிரகாசம், திரு.பூங்கொடி, திரு.மோகன், திரு.அனந்தகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மனவாளன், திருமதி.சித்ரகலா, ஆம்பூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) திரு.ராஜேந்திரன், அரசு மருத்துவர்கள், செவிலியர், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**